**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, மதுராந்தகம்.</u>**

**முன்னிலை – திரு.s.பாஸ்கரன், M.A., B.L.,**

நீதித்துறை நடுவர் எண்.1, மதுராந்தகம்

2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை

**M.C.1/**2023 in C.M.P.No.4447/2023

CNR No. TNKP-17-000117-2021

இலக்கியா, வயது/32, க/பெ நடராஜன்,
எண்.9/3 பழைய சந்தை தெரு
மதுராந்தகம் நகரம் மற்றும் வட்டம்
செங்கற்பட்டு மாவட்டம்.

............ மனுதாரர்

எதிர்

1.நடராஜன், வயது/44,த-பெ விஸ்வநாதன்,
தர்காஸ் நகர், எண்.10 பாலாஜி நகர்,
பெருமாட்டு நல்லூர் கிராமம்,
கூடுவாஞ்சேரி, செங்கற்பட்டு வட்டம். ....... எதிர்மனுதாரர்கள்

இந்த மனு 17.08.2023 ம் தேதி நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இறுதியாக 06.04.2024 ம் தேதியன்று விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.திலகராஜ் B.A., B.L., அவர்கள் ஆஜராகி எதிர்மனுதாரருக்கு நீதிமன்றம் மூலம் பதிவு தபால் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டது. அந்த அறிவிப்பை எதிர்மனுதாரர் வாங்க மறுத்துவிட்டதால்(Refused) 03.10.2023 ம் தேதி எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு (ExParte) ஆகியுள்ள நிலையில் இம்மனு இந்நாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

**1.** மனுதாரருக்கு எதிர்மனுதாரர் எம்.சி.1/2023ல் பிறபித்த உத்தரவின் அடிப்படையில்வ ஜீவனாம்ச தொகையை செலுத்த உத்தரவிட வேண்டி இந்த மனு குவிமுச பிரிவு 128ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்**

2. மனுதாரர் எதிர்மனுதாரர் மீது இந்நீதிமன்றத்தில் கடந்த 07.01.2023ம் தேதி அன்று ஜீவனாம்ச கோரி வழக்கு தாக்கல் செய்தார். அம்மனு எம்.சி,எண்.1/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுதாரர் விசாரிக்கப்பட்டு இந்நீதிமன்றத்தால் கடந்த 12.04.2023 அன்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மாத பராமரிப்பு தொகைக்காக ரூ.10000/-மும் ஆடை மற்றும் மருத்துவ செலவிற்காக வருடத்திற்கு ரூ.15000/-மும் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்த மனுதாரருக்கு செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. மனுதாரர் மனு தாக்கல் செய்த தேதியான 07.01.2023ல் இருந்து 07.08.2023 வரை 7 மாதங்களுக்கான ஜீவனாம்ச தாகை ரூ.85000/-த்தை இனி வரும் எதிர்காலங்களில் மாதம் தோறும் ரூ.10000/- பராமரிப்பு தொகையாகவும் எதிர்மனுதாரர் அளிக்க

வேண்டியது. இதுநாள்வரையில் எதிர்மனுதாரர் நேரிலோ அல்லது கனம் நீதிமன்றத்தின் மூலமோ எந்தவொரு தொகையும் செலுத்தவில்லை. எனவே கனம் கோட்டார் அவர்கள் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி கனம் நீதிமன்றத்திற்கு வரவழைத்து மேற்படி நிலுவைத் தொகையை பெற்றுத்தர வேண்டுமெனவும் அப்படி எதிர்மனுதாரர் மனுதாரர் கொடுக்க வேண்டிய ஜீவனாம்ச தொகையை கொடுக்க தவறினால் Distress Warrantல் கைது செய்ய உத்திரவிடுமாறும் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**மனுதாரர் தரப்பு வாதுரையின் சுருக்கம்**

3. மனுதாரர் எதிர்மனுதாரர் மீது தாக்கல் செய்திருந்த ஜீவனாம்ச மனுவான எம்.சி.1/2023ஆனது இந்நீதிமன்றத்தால் கடந்த 12.04.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மாதம் தோறும் ரூ.10000/- பாராமரிப்பு தொகையாகவும் ஆடை மற்றும் மருத்துவ செலவிற்காக வருடத்திற்கு ரூ.15000/-மும் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதுநாள் வரையிலும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பராமரிப்பு தொகையை வழங்கவில்லை. எனவே இந்த மனுவை அனுமதித்துக் கொண்டு எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சொத்தின் மீது மாவட்ட ஆட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டுமென்று வாதம் செய்யப்பட்டது.

**தீர்வு–**

4. தற்போது தீர்வு காண வேண்டியது என்னவெனில் இந்த மனுஅனுமதிக்கத்தக்கதா?

5. மனுதாரர் எதிர்மனுதாரர் மீது பராமரிப்பு தொகை வேண்டி தாக்கல் செய்த எம்.சி.1/2023 கடந்த 12.04.2023ம்தேதி இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்பட்டுள்ளது. எம்.சி.1/2023ல் இந்த நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் எம்.சி.1/2023 தாக்கல் செய்த தேதியிலிருந்து மாதம் ஒன்றுக்கு பராமரிப்பு தொகையாக ரூ.10000/–மும் ஆடை மற்றும் மருத்துவ செலவிற்காக வருடத்திற்கு ரூ.15000/–மும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. அந்த உத்தரவின் அடிப்படையில் மனு தாக்கல் செய்த 07.01.2023ல் இருந்து 07.08.2023 வரையான 7 மாதங்களுக்கான பராமரிப்பு தொகை ரூ.70000/–மும் ஆடை மற்றும் மருத்துவ செலவிற்கான ஆண்டு தொகையான ரூ.15000/–மும் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிட வேண்டுமென்றும் கொடுக்க தவறினால் எதிர்மனுதாரரை Distress Warrantல் கைது செய்ய உத்திரவிட வேண்டும் என்று இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. இந்த மனுவிற்கான அறிவிப்பை பதிவு தபால் மூலம் எதிர்மனுதாரருக்கு இந்நீதிமன்றம் அனுப்பியுள்ளது. மேற்படி அறிவிப்பை எதிர்மனுதாரர் வாங்க மறுத்துவிட்டார் என்று அந்த பதிவு தபால் அறிவிப்பு திரும்பிவிட்டது. அறிவிப்பு உரிய முறையில் எதிர்மனுதாரருக்கு சார்வு செய்யப்பட்டதாக கருதி கடந்த 03.10.2023ம் தேதி எதிர்மனுதாரருக்கு எதிராக இந்நீதிமன்றம் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்துள்ளது.

7. எதிர்மனுதாரர் நடராஜன் த/பெ.விஸ்வநாதன் பெயரில் அசையா சொத்து இருப்பதற்கான (ஆவண எண்.10564/2013) ஆவணத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை ஆராய்ந்து பார்க்கும் போது, செங்கல்பட்டு வட்டம் எண்.15, கன்னிவாக்கம் கிராமம், பட்டா எண்.355, சர்வே எண்.157/1ல், ஸ்ரீபாலாஜி நகர் Phase.1ல் வீட்டுமனைகள் 10, விஸ்தீரனம் 953 சதுரஅடி மற்றும் மனை

எண்.11 விஸ்தீரனம் 1425.5 சதுரஅடி என 2 வீட்டுமனைகள் எதிர்மனுதாரர் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் 12வது பக்கத்தில் சொத்தின் மதிப்பு ரூ.855300/— என்று குறிப்பிடப்பபட்டுள்ளது.

8. இந்த மனுவானது குவிமுச பிரிவு 128ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரருக்கு போதிய வசதி வாய்ப்பு உள்ள நிலையில் மனுதாரருக்கு பராமரிப்பு தொகையை செலுத்த தவறியிருக்கிறார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

9. S.T.Prabhakar, VS The Secretary to Government, Home Department and others 2011 (1) CWC 175 என்ற வழக்கில் மாண்புமிகு உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் 9வது பத்தியில் கீழ் இருந்து 6வது வரியில் While dealing with a petition under Section 128 of the Code, in such an event, the next course to be adopted by the Magistrate is to issue a "Distraint Warrant' as provided under Sections 421 and 431 of the Code either for attachment and sale of any movable property belonging to the petitioner or to issue a warrant to the Collector of the District, authorizing him to realise the amount as arrears from the movable or immovable property or both of the petitioner. என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அதே முன்தீர்ப்பில் குற்றவியல் நடைமுறை சட்டத்தின் படிவம் 44ன் அடிப்படையில் நீதித்துறை நடுவர் மாவட்ட ஆட்சியருக்கு "Distraint Warrant" அனுப்பலாம் என்று தீர்வு கண்டுள்ளது.

10. இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள எம்.சி.1/2023ல் உத்தரவின் அடிப்படையில் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு பராமரிப்பு தொகையை செலுத்தவில்லை என்பது தெரியவருகிறது. உரிய காரணம் இல்லாமல் இந்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மனுதாரருக்கு பராமரிப்பு தொகையை எதிர்மனுதாரர் செலுத்த தவறியிருக்கிறார் என்பது தெரிய வருகிறது.

11. எதிர்மனுதாரர் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள 7 மாதத்திற்கான பராமரிப்பு தொகை ரூ.70000/— மற்றும் ஆண்டு ஒன்றுக்கான ஆடை மற்றும் மருத்துவ செலவிற்கான தொகை ரூ.15000/—ஐ வருகின்ற 10.05.2024ம் தேதிக்குள் மனுதாரருக்கு செலுத்த வேண்டுமென்றும் தவறினால் குவிமுச பிரிவு 421ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2024ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10ம் நாள் புதன்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது

S BASKAREN
Judicial Magistrate No.1
Digitally signed by S BASKARAN
Location: Maduranthakam

நீதித்துறை நடுவர் எண். 1
மதுராந்தகம்.